



# நகர் ஊரமைப்புத் துறை - (DTCP)

## மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் - திண்டுக்கல் மாவட்டம்

## கோதைமங்கலம் ஊராட்சி

திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், பழனி ஊராட்சி ஒன்றியம், கோதைமங்கலம் ஊராட்சி மற்றும் கிராமம் நில அளவை எண்கள்-20/ 31 - ல் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம்
(திட்டமில்லாப்பகுதி மற்றும் Peri Urban area)

இணையதள விண்ணப்ப எண் : CTP3YCFD dated 07.10.2024

வ

அளவு : 1அங்குலம் 33அடி (1:400)

குறிப்பு:

மனைப்பிரிவின் பரப்பு : 0.75 ஏக்கர் (அ) 3075.0 ச.மீ
கோரிய மனைகள் : 10 மனைகள்
ஒதுக்கிய மனைகள் : 10 மனைகள்
மனைப்பிரிவின் எல்லை
நிலையிலுள்ள சாலை
பொதுஒதுக்கீடு :

உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை :

1) மனைப்பிரிவு சாலைகளின் பரப்பு
மூலை முடுக்கு உட்பட : 722.12 ச.மீ

(மனைப்பிரிவின் மொத்தப்பரப்பு - மனைப்பிரிவு சாலைகளின் பரப்பு ) x 0.5%

(3075.0 - 722.12) X 0.5% = 11.76 ச.மீ

தேவையான பரப்பளவு : 11.76 ச.மீ (0.50% )

2) TANGEDCO ஒதுக்கீடு : 12.00 ச.மீ (0.51 %)

3) பொது உபயோகம் ஒதுக்கீடு : 12.12 ச.மீ (0.51 % )

4) பொது ஒதுக்கீடான பூங்காவிற்கு தேவையான பரப்பு :
பூங்கா ஒதுக்கீடு அரசாணை எண்.18 ந.நி. (ம) கு.வ.து நாள்: 04.02.2019-ன் படி TNCDBR -2019-ன் விதி எண் : 47(6)-ன் படி 10% O.S.Rஒதுக்கிட்டிற்கு ஈடான அரசு வழிகாட்டு மதிப்பு தொகை மனுதாரால் செலுத்தப்பட்டுள்ளது.

மூலை முடக்கு :

12மீ வரையிலான அகலச்சாலைகளுக்கு 1.50மீ x 1.50மீ விடப்பட வேண்டும்
12மீ முதல் 30.5மீ வரையிலான அகலச்சாலைகளுக்கு 1.50மீ x 1.50மீ விடப்பட வேண்டும்

நிபந்தனைகள்

1. அரசாணை எண்: 181, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள் 09.12.2020-ன்படியும் மற்றும் நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்களது சுற்றறிக்கை ந.க.எண்.19799/2020.ஃபோ நாள்:24.12.2020, அரசாணை எண்: 18, ந.நி.(ம)கு.வ.(ந.ப.1) துறை நாள்:04.02.2019-ன்படியும் அரசாணை எண்.16, ந.நி (ம)கு.வ.துறை, நாள்.31.01.2020 ன்படியும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

2. இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும் முன் இடத்தினை எந்தத்துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்றும், எந்த துறைக்காகவும் நிலஆர்ஜிதப்பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பபடவில்லை என்றும் சம்மந்தப்பட்ட உள்ளாட்சி அவர்கள் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

3. நில உரிமை குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என்று அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவுக்கு தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழிற்நுட்பஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களால் ரத்து செய்யப்படும்.

4. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும்போது இவ்வாணையின் நகலோடு, நகர் ஊரமைப்புத்துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.

5. ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள மனைப்பிரிவு வரைபடத்தை எவ்வித மாற்றம்.ஃவிடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 0.6மீ x 1.2மீ அளவிற்கு குறையாமல் நிரந்திர தகவல்பலகை மூலம் பொது மக்கள் பார்வைக்கு நிரந்திரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.

6. உத்தேச மனைப்பிரிவு சாலைகள் தார் சாலைகளாக அமைக்கப்பட்ட பின்னர் உத்தேச மனைப்பிரிவு சாலைகளின் தரம் குறித்து உரிய அலுவலரிடமிருந்து தகுதிச்சான்று பெற்றுக்கொள்ள வேண்டும்.

7. நலிவடைந்த வருவாய் பிரிவினர்க்கான EWS மனைகளை இத்துறையின் அனுமதியின்றி மனைஉட்பிரிவு (ம) மனைகளை ஒருங்கிணைப்பு செய்யக்கூடாது.

8. உத்தேச மனைப்பிரிவின் ஊடே செல்லும் குறைந்த மின்னழுத்த கம்பி பாதையினை அங்கிகரிக்கப்படும் மனைப்பிரிவின் சாலைகேற்ப மனுதாரர் தனது செந்த செலவில் மாற்றி அமைத்துக்கொள்ள வேண்டும்.

9. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்கள் சுற்றறிக்கையின்படி, "The Tamil nadu Government in G.O. Ms.No:112, Housing and Urban Development Department, Dated: 22.06.2017 have approved the Tamilnadu Real Estate (Regulation & Development) Act 2016. The promoter has to advertise, Market, book, sell or offer for sale, or invite persons to purchase in any manner any plot, apartment or building, as the case may be in any Real Estate project or part of it only after registering the real estate Project with the TNRERA (TamilNadu Real Estate Regulatory Authority)"

குறிப்பு. அனைத்து அளவுகளும் மீட்டரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

SWP/DTCP/DINDIGUL/LAYOUT NO. 109/2025

அளவர்/உதவி வரைவாளர்

Signature Not Verified
Signed by Deputy Director
Location:Dindigul
Date:2025.08.25 09:56:51

கு.பாலகிருஷ்ணன்
கட்டிடக்கலை / திட்ட உதவியாளர்

துணை இயக்குநர் (பொ)
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
திண்டுக்கல் மாவட்டம்